**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண்.154/2019**

2023 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 18–ம் நாள் வெள்ளிக்கிழமை என்பவரது சாட்சியின் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு T. சோழவேந்தன் B.A.,B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 18.08.2023 | தந்தை/கணவர் பெயர்: | சந்திரமோகன் |
| பெயர்: | அருண்பாரத் (PW-2 Chief ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | கிராம நிர்வாக அலுவலர், செம்பதனிருப்பு | சமயம்: | |
| சாதி: | | வயது : | 32 /2023 |
| தொழில்: | | | |

**முதல் விசாரணை : 18.08.2023.**

நான் நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை கிடைக்க பெற்று அதன் அடிப்படையில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் செம்பதனிருப்பு கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த ஒரு மாதமாக தான் மேற்படி கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு சேமங்கலம் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வந்தேன். புல எண்.216 மற்றும் 215-க்கான நத்தம் நிலவரி திட்ட அடங்கல் பதிவேடு கொண்டு வந்துள்ளேன். புல எண்.216 திருத்திற்கு முன்பு புல எண்.216/2 சி ஆக இருந்தது. திருத்திற்கு பின்பு புல எண்.216/2 சி1 மற்றும் புல எண்.216/2 சி2 என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. புல எண்.216/2 சி திருத்திற்கு முன்பும் பின்பும் யார் பெயரில்

உள்ளது என்றால் நாராயணசாமி மகன் கலியபெருமாள் பெயரில் உள்ளது. அதற்கான நத்தம் நிலவரி திட்ட தூய அடங்கல் பதிவேடின் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட உண்மை நகலை தாக்கல் செய்கிறேன். **அது நீதிமன்ற சாட்சி சான்றாவணம் 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. புல எண்.215/1 ஏ 1 மற்றும் புல எண்.215/1 ஏ 2 யார் பெயரில் அடங்கல் பதிவாகியுள்ளது என்றால் நாராயணசாமி மகன் கலியபெருமாள் பெயரில் பதிவாகியுள்ளது. அதற்கான நத்தம் நிலவரி திட்ட தூய அடங்கல் பதிவேடின் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட உண்மை நகலை தாக்கல் செய்கிறேன். **அது நீதிமன்ற சாட்சி சான்றாவணம் 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. புல எண்.215-க்கான புல வரைபடம் கொண்டு வந்துள்ளேன். அதன் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட உண்மை நகலை தாக்கல் செய்கிறேன். **அது நீதிமன்ற சாட்சி சான்றாவணம் 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. புல எண்.216-க்கான புல வரைபடம் கொண்டு வந்துள்ளேன். அதன் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட உண்மை நகலை தாக்கல் செய்கிறேன். **அது நீதிமன்ற சாட்சி சான்றாவணம் 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. புல எண்.215 மற்றும் புல எண்.216-க்கான பழைய 'அ' பதிவேடு கொண்டு வந்துள்ளேன். அதன் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட உண்மை நகலை தாக்கல் செய்கிறேன். **அது நீதிமன்ற சாட்சி சான்றாவணம் 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. புல எண்.215/1 ஏ மற்றும் புல எண்.216/2 சி யார் பெயரில் பழைய அ பதிவேட்டில் பதிவாகியுள்ளது என்றால் நாராயணசாமி மகன் கலியபெருமாள் பெயரில் பதிவாகியுள்ளது. அ பதிவேடு ஆனது தற்சமயம் இணைவழியில் பதிவு செய்யப்பட்டுள்ளது. புல எண்.215 மற்றும் 216-க்கான அ பதிவேட்டின் இணைவழி நகலை கொண்டுவந்துள்ளேன். புல எண்.215/1 ஏ 2 யார் பெயரில் பதிவாகியுள்ளது என்றால் கலியபெயரில் இருந்து தற்சமயம் 2 உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டு புல எண்.215/1 ஏ 2 ஏ விஸ்தீரணம் 0.98.49 அப்துல் ரஹ்மான் மகன் சிராஜுதீன் பெயரிலும் புல எண்.215/1 ஏ 2 பி விஸ்தீரணம் 0.08.51 பன்னீர்செல்வம் மகன் முருகன் பெயரிலும் பதிவாகியுள்ளது. அதன் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட

உண்மை நகலை நகலை தாக்கல் செய்கிறேன். **அது நீதிமன்ற சாட்சி சான்றாவணம் 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. மேற்படி உட்பிரிவுகள் எதன் அடிப்படையில் பதிவு செய்யப்பட்டது என்பதற்கான குறிப்புகள் எதுவும் காணப்படவில்லை. புல எண்.216/2 சி இணைவழி அ பதிவேட்டில் யார் பெயரில் பதிவாகியுள்ளது என்றால் நூர்ஜகான் பீவி மற்றும் ஒரு நபர் பெயரில் பதிவாகியுள்ளது. அதன் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட உண்மை நகலை தாக்கல் செய்கிறேன். **அது நீதிமன்ற சாட்சி சான்றாவணம் 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. புல எண்.215/1 ஏ 2 ஏ-க்கான தற்போதைய சிட்டா கொண்டுவந்துள்ளேன். அதன் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட உண்மை நகலை தாக்கல் செய்கிறேன். **அது நீதிமன்ற சாட்சி சான்றாவணம் 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. புல எண்.216/2 சி-க்கான தற்போதைய சிட்டா கொண்டுவந்துள்ளேன். அதன் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட உண்மை நகலை தாக்கல் செய்கிறேன். **அது நீதிமன்ற சாட்சி சான்றாவணம் 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பதிவு செய்யப்பட்ட கிரய ஆவணங்களில் கண்ட புல எண்களின் படி வருவாய் துறை ஆவணங்களில் மாற்றம் செய்யப்படுவது வழக்கம் என்றால் சரிதான். புல எண்.215/1 ஏ 2 பி-க்கான தற்போதைய சிட்டா கொண்டுவந்துள்ளேன். அதன் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட உண்மை நகலை தாக்கல் செய்கிறேன். **அது நீதிமன்ற சாட்சி சான்றாவணம் 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. புல எண்.215/1 ஏ 2 ஏ மற்றும் புல எண். 215/1 ஏ 2 பி-க்கான இணைவழி அடங்கலின் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட உண்மை நகலை தாக்கல் செய்கிறேன். அது முறையே **நீதிமன்ற சாட்சி சான்றாவணம் 11 மற்றும் 12 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. புல எண்.216/2 சி-க்கான இணைவழி அடங்கலின் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட உண்மை நகலை தாக்கல் செய்கிறேன். அது **நீதிமன்ற சாட்சி சான்றாவணம் 13 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. சிட்டாவில் என்ன பதிவுள்ளதோ அதே தான் அடங்கலிலும் பதியப்படும் என்றால் சரிதான். தவறான புல எண் பதிவு கொண்ட கிரய

ஆவணத்தின் அடிப்படையில் கள ஆய்வு செய்யாமல் பட்டா உரிமைமாற்றம் செய்தால் தவறு ஏற்பட வாய்ப்புள்ளது.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.